# மதிப்புரை

# எண்ணங்களின் எதிரொலி

**இராம.குருநாதன்**

**தமிழ்ப் பேராசிரியர் – ஓய்வு**



**பனிக் காற்றும் பறவைப் பாட்டும்**

விழிகள் தி.நடராசன்
விழிகள் பதிப்பகம்
விலை ரூ.100
9444 265152

'பனிக்காற்றும் பறவைப்பாட்டும்' என்னும் கவிதைத் தொகுதியை எழுதியிருக்கும் விழிகள் தி.நடராசன், சமூக அக்கறையோடு எழுதக்கூடியவர். இதற்கு முன் அவர் இரண்டு மூன்று கவிதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார். சமூகத்தில் நிகழும் அன்றாடக் காட்சிகளை இயல்பான கவிதையோட்டத்தோடும், எளிமையோடும் கவினுற அளித்துள்ளார்.

கவிதைகளில் கருத்துகளை அடுக்கியுரைத்து இறுதியில், முத்தாய்ப்பாய் முடித்திருக்கும் கவிதைகள் இரசிக்கதக்கன. புதுக்கவிதை இவருக்கு வசப்பட்டிருக்கிறது என்று சொல்லவேண்டும். சாதாரண மக்களும் எளிதில் புரிந்துகொள்ளும் நடை இவருடையது.

பாரதி பற்றிய கவிதையில் அவரது பன்முகப் பார்வைகளை அடுக்கிச் சொல்லியுள்ள நடராசன், தொடக்க வரிகளில் ஈர்க்கிறார்.

'நீ வைத்துக்கொண்டிருந்த எழுதுகோல்
தீ வைத்துச்சென்ற எழுதுகோல்;
அதனால்தான்
எதை எழுதினாலும்
தீப்பிடித்துக்கொண்டே வருகின்றன
உன் சொற்கள்'

என்று எழுதுகிறார். பாரதி ஒரு நெருப்புக் கவிஞன் என்பதைச் சுருக்கமான வார்த்தைகளில் சொல்லி நம்மை வசப்படுத்துகிறார். கொல்கத்தாவில் பாரதி பற்றி இக்கவிஞர் எழுதிய கவிதை வரவேற்பைப் பெற்றது. 'உன் வீரியக் கவிதைகள் பேரிகைகொட்டி வரவேண்டும்' என்கிற தம் வேட்கையைப் பாரதியிடம் வேண்டுகிறார் இக்கவிஞர். (ப.107)

எந்தக் கவிஞனுக்கும் குறிக்கோள் வேண்டும். இதனைக் கவிஞர்கள் படைக்கும் கவிதைகளில் காணலாம். இக்கவிஞரும் தம் எண்ணத்தை வெளிப்படுத்தும்போது, 'இடிபோல் வந்திறங்குவதில்லை என் கவிதை; மின்னலுடன் தோன்றி மறையும் வானவில்லும் அல்ல; காலத்தே பயிர் செய்யக் காத்திருக்கும் விவசாயிக்குத் தேவைப்படும் பருவ மழை என் கவிதைகள்' (முப்போகம் ப.85) . இப்படிச் சொல்வது பருவ மழை இதமாகப் பெய்து கதிர்கள் தழைப்பதற்கு உறுதுணையாக இருக்கும்; அதுவே, புயலானால் அதன் வீச்சு எப்படியிருக்கும் என்று தெரியும்; இவருடைய கவிதைகளில் இதமும் உண்டு; புயலும் உண்டு; சொல்லாத கவிதை (ப.73) என்கிற தலைப்பில் இவர் எழுதுகிறார்: 'என் கவிதையைப் படித்துப் பிடிக்கவில்லையென்று கையுதறிச் செல்லும் வேளையில் அதிலிருந்து சிதறும் ஒரு சொல் என் கவிதையின் தலைப்பாகலாம்' என்கிறார்.

பாரதிதாசன், பெரியார், கண்ணதாசன், இன்குலாப், 'ஞானாலயா' கிருஷ்ணமூர்த்தி, கலைஞர் (இரங்கல் கவிதை) முதலானோர் பற்றி உணர்வுபடத் தீட்டியுள்ள கவிதைகள் எண்ணிப் பார்க்கத்தக்கன. கண்ணதாசனைப் படம் பிடித்துக் காட்டும் கவிஞர்,

ஆடையில்லாக் குழந்தைக்கும்
ஆடையில்லா நிலவுக்கும்
பாடையில் போகிறவனுக்கும்
வளைகுலுங்கும் வனிதைக்கும்
கவியாடை கட்டிப் பாடியவன் நீ (ப.94)

என்று அழகுறக் கூறுகிறார்.

கவிஞரின் பழைய நினைவலைகள் 'களத்து மேடு' (ப.40), பெரிய வாத்தியார் (ப.86), ஆர்மோனியப் பெட்டி (ப.102) ஆகியவற்றில் வெளிப்படுகின்றன. அவற்றில் பழைய நினைவுகளின் அடிச்சுவடு நம்மையும் பழைய நாள் நினைவுகளை அசைபோடத் தூண்டும்.

பெண்ணுரிமை போற்றும் கவிஞர் பெண்ணைப்பற்றிய நேர் நோக்கும், அவர்களுக்குப் பாதுகாப்பு இன்மையையும் கூர்மைப்பட உணர்த்துகிறார். 'மலட்டு மண்ணாய் மணக்காதீர்கள்' (ப.83) என்று பெண்களுக்கு அறைகூவல் விடுத்தாலும், சற்றே உரத்த குரலில் பெண்ணுரிமை போற்றுகிறார். சமூகப் பொறுப்புப் பற்றிய கவிதைகளில் ஒன்றான 'நீங்கள்... நீங்கள்... நீங்கள்...?' (ப.79) என்கிற கவிதை மிகவும் உணர்ந்து படிக்கப்பட வேண்டிய கவிதை.

'மூன்றாம் கண்ணைத் திற' என்கிற கவிதை, கட்டமைப்புச் சரியாக அமைந்த கவிதை. தேர்தலில் மக்கள் மனநிலையைப் பிரதிபலிக்கும் கவிதை. அரசியல்வாதியின் அலங்கோலங்கள் இதில் அலசப்படுகின்றன. (ப.53 – 55). நடைமுறைக் கவிதை என்று அழைக்கக்கூடிய 'சொல்லவேண்டாம்' (ப.65) என்கிற தலைப்பில் அமைந்த கவிதை ஓர் இயல்பான காட்சி ஒன்றைக் காட்டுவதன்மூலம் நம்மைச் சிந்திக்கச் செய்கிறது. தமிழ் மொழி பற்றிய சிந்தனையைச் 'செல்கிறாள் தமிழ்மகள்', (ப.62) என்னும் கவிதை நம்மை உசுப்பிவிடுகிறது.